**தமிழ் நாடு மாநில ஹஜ் குழு**
**சென்னை–600 034.**

**<u>ஹஜ் 2010–ற்கான விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள்</u>**

**<u>குறிப்பு:</u>**ஆங்கிலத்தில், பெரிய எழுத்துக்களில் மட்டும் பூர்த்தி செய்யவேண்டும். விண்ணப்பத்தின் முதல் படிவம் உறையின் தலையாய நபரால் பூர்த்தி செய்யப்படவேண்டும். மீதமுள்ள படிவங்களை அவ்வுறையில் இதர விண்ணப்பதாரர்கள் யாரேனும் இருந்தால் அவர்களால் பூர்த்தி செய்யப்படவேண்டும். அதாவது அவ்வுறையில் உள்ள இரண்டாவது நபர் படிவத்தின் வலது புறத்தில் சக விண்ணப்பதாரர்–2 என்று குறிப்பிட்டுள்ள படிவத்திலும், மூன்றாவது நபர் சக விண்ணப்பதாரர்–3 என்று குறிப்பிட்டுள்ள படிவத்தையும் பூர்த்தி செய்யவேண்டும். குழந்தைகளுக்கான விவரங்களை குழந்தைகளுக்கு என்று குறிப்பிட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்யவேண்டும்.

**<u>புகைப்படம்:</u>** புகைப்படங்கள் 3.5 x 3.5 செ.மீ. பாஸ்போர்ட் அளவிலும், பின்னணி வெள்ளை நிறத்திலும் இருக்கவேண்டும். விண்ணப்பப்படிவத்தின் முதல் பக்கத்தில் விண்ணப்பதாரின் பாஸ்போர்ட் அளவிலான தற்போதைய புகைப்படம் ஒன்றையும் விண்ணப்பத்தின் இரண்டாவது பக்கத்தில் ஒரு புகைப்படத்தையும் ஒட்டவும்.

1. தொகை செலுத்துவதற்கான கணக்கு எண். **31136268352**

வங்கி குறிப்பு எண் : ஹஜ் புனிதப் பயணிகள் தெரிவு செய்யப்பட்டதற்கான கடிதத்தில் இந்திய ஹஜ் குழுவால், குறிப்பிடப்பட்டுள்ள வங்கி குறிப்பு எண்ணை தவறாமல் பூர்த்தி செய்யவேண்டும்.

தொகை : தாங்கள் மற்றும் தங்களுடைய குழு உறுப்பினர்களுக்காக செலுத்திய தொகையினை எழுதவும்.

கிளையின் பெயர் : கிளையின் பெயரை எழுதவும்.

கிளையின் குறியீட்டு எண் : கிளையின் குறியீட்டு எண்ணை எழுதவும்.

செலுத்திய நாள் : பணம் செலுத்திய தேதியை எழுதவும்.

**<u>குறிப்பு</u>** : அந்நியச் செலாவணி முன்பணத்தொகை செலுத்துவதற்காக விண்ணப்பப் படிவத்தின் கடைசி பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள பணம் செலுத்தும் இரசீதை (Pay-in-slip) பயன்படுத்துமாறும் அதில் மேலே குறிப்பிட்ட விவரங்களை தவறாமல் அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்விவரங்கள் விண்ணப்பப் படிவத்திலும் எழுதியிருக்கவேண்டும்.

2. தங்குமிட வகை : விரும்பும் தங்குமிட வகையை (_/) குறியீடு செய்யவும்.

பச்சை : பச்சை வகை தங்குமிடத்திற்கு விருப்பம் தெரிவித்தால் இக்கலத்தில் (_/) குறியிடவும்.

வெள்ளை : வெள்ளை வகை தங்குமிடத்திற்கு விருப்பம் தெரிவித்தால் இக்கலத்தில் (_/) குறியிடவும்.

அஸிஸியா : அஸிஸியா வகை தங்குமிடத்திற்கு விருப்பம் தெரிவித்தால் இக்கலத்தில் (_/) குறியிடவும்.

விலக்கு : ஏதேனும் விலக்கிற்கு விருப்பம் தெரிவித்தால், ரூபாத் பெயரை எழுதவும். ருபாத்தில் தங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கும் புனிதப் பயணிகள், ருபாத்தில் தங்குமிடத்திற்கான ஒதுக்கீடு கடிதம் பெறும் வரையில், மூன்று தங்குமிட வகைகளில் அதாவது, பச்சை, வெள்ளை அல்லது அஸிஸியா ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வகையை குறிப்பிடவும்.

ஷியா பயணிகளுக்கான மீக்காத் எல்லை.: ஷியா புனிதப் பயணிகள் Johfa என்ற கலத்தில் (_/) குறியீடு செய்யவும். (ஆம் / இல்லை)

3. பன்னாட்டு கடவுச் சீட்டின் விவரங்கள்.
(செல்லத் தக்க பன்னாட்டு கடவுச் சீட்டை இணைக்கவும்)

கடவுச் சீட்டு எண் : கடவுச் சீட்டின் எண்ணை எழுதவும்.

வழங்கப்பட்ட இடம் : வழங்கப்பட்ட இடத்தின் பெயரை எழுதவும்.

வழங்கப்பட்ட நாள் : வழங்கப்பட்ட தேதியினை எழுதவும்.

கால முடிவு நாள் : கடவுச் சீட்டின் முடிவு தேதியினை எழுதவும்.

விண்ணப்பதாரர் : குடும்பப் பெயர் : கடவுச் சீட்டில் உள்ளவாறு குடும்பப் பெயரை எழுதவும்.

: சூட்டப்பட்ட பெயர் : கடவுச் சீட்டில் உள்ளவாறு சூட்டப்பட்ட பெயரை எழுதவும்.

தந்தையின் முழுப்பெயர்: கடவுச் சீட்டில் உள்ளவாறு தந்தையின் பெயரை எழுதவும்.

தாயின் பெயர் : கடவுச் சீட்டில் உள்ளவாறு தாயின் பெயரை எழுதவும்.

கணவன்/மனைவியின் பெயர் : கணவன்/ மனைவியின் பெயரை எழுதவும்.

<u>தெரு எண் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் உடன் தற்போதைய வீட்டு முகவரி.</u>

தற்போதைய சரியான வீட்டு முகவரியை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் எழுதவும்.

மாவட்டம் : மாவட்டத்தின் பெயரை எழுதவும்.

மாநிலம் : மாநிலத்தின் பெயரை எழுதவும். அதாவது, TAMIL NADU.

தொலைபேசி எண் குறியீட்டு எண்ணுடன் : தொலைபேசி எண்ணை குறியீட்டு எண்ணுடன் எழுதவும்.

கைபேசி எண் : கைபேசி எண்ணை எழுதவும்.

பாலினம் : ஆண்/பெண் – பொருத்தமான கலத்தில் (_/) குறியீடு செய்யவும்.

தொழில் : இக்கலத்தில் தங்கள் தொழிலை எழுதவும்.

திருமணமானவரா? இல்லையா? : திருமணமானவர்/திருமணமாகாதவர் பொருத்தமான கலத்தில் (_/) குறியீடு செய்யவும்.

அங்க அடையாளங்கள்: அங்க அடையாளம் பற்றிய விவரத்தை இக்கலத்தில் எழுதவும்.

கல்வித் தகுதி : தங்களின் கல்வித் தகுதியை இக்கலத்தில் எழுதவும்.

பிறந்த தேதி : வயதை எண்களில் பூர்த்தி செய்யவும்.

வயது : வயதினை எழுதவும்.

பிறந்த இடம் : பிறந்த இடத்தினை எழுதவும்.

4. நியமிக்கப்பட்டவரின் பெயர் மற்றும் உறவு முறை:-
(சவூதி அரேபியாவில் அசம்பாவிதம் ஏதும் நேரிட்டால் தொடர்பு கொள்வதற்காக இந்தியாவில் நியமிக்கப்பட்ட நபரின் விவரங்கள்)

முழுப் பெயர் : சவூதி அரேபியாவில் அசம்பாவிதம் ஏதும் நேரிட்டால் தொடர்பு கொள்வதற்காக இந்தியாவில் தாங்கள் யாரை நியமிக்க விரும்புகிறீர்களோ அந்நபரின் பெயரை எழுதவும்.

உறவுமுறை : நியமனதாரருடனான உறவுமுறையை எழுதவும்.

முகவரி : நியமனதாரரின் முகவரியை எழுதவும்.

நியமனதாரரின் கையொப்பம்/இடது கை பெருவிரல் ரேகை. : இக்கலத்தில் நியமனதாரரின் கையொப்பம்/ இடது கை பெருவிரல் ரேகை இடவும்.

தொலைபேசி எண் குறியீட்டு எண்ணுடன் : தொலைபேசி எண்ணை குறியீட்டு எண்ணுடன் எழுதவும்.

கைபேசி எண் : கைபேசி எண்ணை எழுதவும்.

5. மெஹ்றமின் பெயர் மற்றும் மெஹ்றமின் உறவுமுறை
(பெண் புனிதப் பயணிகளுக்கு மட்டும்)

பெண் புனிதப் பயணியுடன் பயணம் புறப்படுவர்/மெஹ்றமின் பெயர் மற்றும் உறவுமுறை.

கணவர் அல்லது இஸ்லாமிய சட்டத்தின்கீழ், இரத்த பந்தம் அல்லது பால்குடி பந்தம் அல்லது கணவர் வீட்டாரின் உறவு ஆகியவற்றின் காரணமாக பயணியுடன் மணம் புரிய அனுமதிக்கப்படாதவர் மெஹ்ரமாக கருதப்படுவார். ஹஜ்ஜிற்குச் செல்லும் பெண் பயணியின் வயது, மணத்தகுதி எவ்வாறாக இருந்தாலும், அவருடன் மெஹ்றம் இருக்கவேண்டும். மெஹ்றம் வயது வந்த, முழுபுத்தி சுவாதீனமுடைய ஆணாக இருக்கவேண்டும். மெஹ்றம் பற்றிய விவரம் பின்வருமாறு:—
(1) கணவர், (2) தந்தை, (3) மகன், (4) சகோதரன், (5) மாமன் (Uncle) – இரத்த சம்பந்தமுள்ள தந்தையின் சகோதரன், தாயின் சகோதரன், (6) உடன்பிறந்தார் உறவு (Nephew) – இரத்த சம்பந்தமுள்ள சகோதரியின் மகன் மற்றும் சகோதரனின் மகன், (7) மாமனார், (8) மருமகன், (9) தாத்தா, மற்றும் (10) பேரன்.

பெயர் : மெஹ்றமின் பெயரை எழுதவும்.

உறவுமுறை : மெஹ்றமின் உறவுமுறையை எழுதவும்.

மெஹ்றமின் கையொப்பம்/ இடது கை பெருவிரல்ரேகை. : இக்கலத்தில் மெஹ்றமின் கையொப்பம்/ இடது கை பெருவிரல் ரேகை இடவும்.

6. தங்களுக்கு திருப்பியளிக்க வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின் அதனை திருப்பி அளிப்பதற்கு வங்கி விவரங்கள் தக்க கலத்தில் பூர்த்தி செய்யவும்.

7. சிறப்பு கோரிக்கை ஏதேனும் இருப்பின் : சிறப்பு கோரிக்கைகள் ஏதேனும் இருந்தால் அதனை எழுதவும்.

8. விண்ணப்பதாரரின் கையொப்பம்/இடது கை பெருவிரல் ரேகை. : இக்கலத்தில் கையொப்பம்/இடது கை பெருவிரல் ரேகை இடவும்.

**மருத்துவச் சான்றிதழ்:**

இக்கலத்தில் பதிவு பெற்ற அரசு மருத்துவரால் பூர்த்தி செய்யப்பட்டு அவரின் கையொப்பம் மற்றும் முத்திரை போடப்படவேண்டும். தங்களின் இரத்த வகையை மறவாமல் குறிப்பிடவும். இக்கலத்தில் நீங்கள் இரத்த அழுத்த நோயாளியாக இருக்கும் பட்சத்தில், இரத்த அழுத்தம் பற்றிய விவரத்தை குறிப்பிட வேண்டும். மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள இதர நோய்களால் பாதிக்கப்பட்டவர் அதற்கான கலத்தில் குறியிடவும்.

**விண்ணப்பதாரரின் உறுதிமொழி:**

விண்ணப்பதாரர் முழுமையாகப் படித்து பின்னர், இக்கலத்தினை கையொப்பம் முதலியவற்றுடன் பூர்த்தி செய்யவும். இக்கலத்தில் விண்ணப்பதாரரின் பெயர், தந்தை/கணவர் பெயர் மற்றும் முழு விலாசம் முதலியவற்றைக் குறிப்பிடவும். இக்கலத்தில் உரிய இடத்தில் தங்களின் கையெழுத்தை இடவும்.

**உத்தரவாதம்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று உறுதிமொழிகளை அளிக்கவேண்டும். அவ்வாறு இல்லையெனில் ஹஜ் 2010–ற்கான தங்களின் விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1. கடந்த ஐந்து ஆண்டுகளில் அதாவது 2006 முதல் 2009 வரையில் ஹஜ் பயணம் மேற்கொண்டு இருக்கக்கூடாது.
2. ஹஜ் பயணத்தின்போது வரையறுக்கப்பட்ட அளவிலான ஒரே மாதிரியான பயண உடமைகள் பயன்படுத்தப்படும் என உறுதிமொழி அளிக்கவேண்டும்.
3. தங்களால் கோரப்பட்ட தங்குமிட வகை இல்லாதபட்சத்தில் இந்திய உதவித்தூதரகத்தால் தங்குமிட வகை மாற்றப்பட்டால் அதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பதற்கான உறுதிமொழி அளிக்க வேண்டும்.

**உறுதியளித்தல் சான்றிதழ்:** (3.5 x 3.5 செ.மீ. தற்போதுள்ள பாஸ்போர்ட் அளவிலான பின்னணி வெள்ளை நிறத்தில் உள்ள புகைப்படத்தை கொடுக்கப்பட்ட கலத்தில் ஒட்டவும்)

பின்வரும் நபர்களில் எவரேனும் ஒருவர், உறுதியளித்தல் சான்றிதழில் கையொப்பமிடல் வேண்டும்:–

பாராளுமன்ற உறுப்பினர், மத்திய ஹஜ் குழு உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாநில ஹஜ் குழு உறுப்பினர், மாநகராட்சி கவுன்சிலர், அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளின் முதல்வர், மாவட்ட வாரிய உறுப்பினர், மாவட்ட ஆட்சியர், அரசு நிறுவனங்களின் பொது மேலாளர், வட்டாட்சியர், அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், காவல்துறை ஆய்வாளர்கள், கிராம/ஊராட்சி தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.

சான்றொப்பமிடும் அதிகாரியின் விவரங்களான பெயர், பதவிப் பெயர், நாள் மற்றும் கையெழுத்துடன் முத்திரை ஆகியவற்றை பூர்த்தி செய்யவேண்டும்.

**குறிப்பு:** ஒரு குழுவில் குழந்தை ஏதேனும் இருப்பின், விண்ணப்பப் படிவத்தில் இணைக்கப்பட்டுள்ள 'குழந்தை படிவத்தில்' அதன் விவரத்தை பூர்த்தி செய்யவேண்டும். ஒரு உறையில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த குழந்தைகள் இரண்டு வயதிற்கு கீழ் உள்ளவராக இருக்கவேண்டும்.

---